**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No.18/2024**

Deposition of witness for **PW2** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr. S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Narayanappa | Father's Name | : | Chinnappa |
| Village | : | | Age | : | |

**நாள்:26.03.2025.**

**மா.சா.1 முதல் விசாரணை :**

நான் அசல் மனு எண்.23/2024 ல் மனுதாரர் இந்த மனுவில் , ம.சா.2 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன்.

10.05.2023 முதல் 13.05.2023 வரையுள்ள மருத்துவமனை விடுவிப்பு சான்றிதழ் அசல் **Ex.P**9 ஆகவும்,

எனது ஆதார் கார்டு ஜெராக்ஸ் நகல் **Ex.P**10 ஆகவும், அது அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது.

எனது பேன்கார்டு ஜெராக்ஸ் நகல் **Ex.P11** ஆகவும், அது அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது.

எனது வங்கி பாஸ்புத்தகம் ஜெராக்ஸ் நகல் **Ex.P12** ஆகவும், அது அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது.

எனது மருத்துவமனை பில்கள் ரூ.1,76,964 **Ex.P13** ஆகவும், 2 வது எதிர் மனுதரார் தரப்பு ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது.

அசோகா மருத்துவ மனையில் தனக்கு வழங்கப்பட் OP சீட்டு (100 ரூபாய்) **Ex.P14** ஆகவும்

எனது இருச்சக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் **Ex.P15** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணை 2 வது எதிர் மனுதாரர் தரப்பில்**

நான் TN24V3181 என்ற வாகனத்தை ஓட்டி சென்றேன் என்றால் சரிதான். எனது மனைவி பின்னால் அமர்ந்திருந்தார் என்றால் சரிதான். நான் ஓடடி சென்ற வாகனத்திற்கு இன்சூரன்ஸ் இல்லை என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். எனது வாகனத்திற்கு பிட்நஸ் இல்லை என்று RTO ஆல் வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து மாலை 6 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் TN24V3181 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தின் போது ஈடுபட்ட மற்றொரு வாகனமும் யமஹா இருசக்கர வாகனம் என்றால் சரிதான். இரண்டு இருச்சரக்கர வாகனமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டது என்றால் சரிதான். எனக்கு எதிராக பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்வதற்கு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 1, 2 எதிர்மனுதாரர்கள் வாகனத்தை இந்த வழக்கில் தவறுதலாக போட்டிருககிறோம் என்றால் சரியல்ல. 1,2 எதிர்மனுதாரார்களின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் காரணம் இல்லை என்பதால் அவர்கள் இழப்பீடு கொடுக்க தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கவணமாக ஓட்டியிருந்தால் விபத்தை தவிர்திருக்காலாம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இடது கண்ணத்தில் அடிப்பட்டது. முதலில் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப்பார்த்து பிறகு பெங்களுரில் உள்ள நாராயணா மருத்துவமனையில் சிசிச்சைக்கு சேர்ந்தேன். நான் தாக்கல் செய்துள்ள மா.த.சா.ஆ.13 க்கான தொகை கிடைக்கவேண்டும் என்றால் நான் மருத்துவமனையை விசாரிக்க வேண்டும் என்றால் சரியல்ல. 1 வது எதிர்மனுதரார் வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் பாலீசி விதிமீறல் உள்ளதால் 2 வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடைமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் வேலை செய்துவருவதை காட்டுவதற்கும் வருமானம் வருவதை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ அல்லது செயல்

திறன் பாதிப்போ வருமான இழப்போ இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தின் போது நான்ஹெல்மட் அணிந்திருந்தேனா என்றால் அணிந்திருந்தேன். நான் ஹெல்மட் போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஹெல்மட் போட்டிருந்தால் எனக்கு தலையில் அடிப்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. எனது கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் அதனால் 2 வது எதிர்மனுதரார் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஓம்./– எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.

**IN THE COURT OF THE SUB JUDGE, DENKANIKOTTAI**

**MCOP.No.18/2024**

Deposition of witness for **PW1** for Petitioner and solemnly affirmed and oath for sworn taken file by Tr. S.Prakash, Gr.II Bench Clerk in accordance with the provisions of Act 1975.

| | | | |
|---|---|---|---|
| Name | : Muthuvediyamma | Husband Name | : Naraynappa |
| Village | : | Age | : |

**நாள்:26.03.2025.**

**மா.சா.1 முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் மனுதாரர், ம.சா.1 ஆக இருந்து எனது முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதனை சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். அசல் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக பெற வேண்டுகிறேன்.

11.05.2023 ம் தேதியிட்ட குற்ற எண்.187/2023 முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் **Ex.P**1 ஆகவும்,

10.05.2023 முதல் 13.05.2023 வரையுள்ள மருத்துவமனை விடுவிப்பு சான்றிதழ் அசல் **Ex.P**2 ஆகவும்,

**TN70AM9157** வாகனத்தின் பதிவு சான்றிதழின் ஜெராக்ஸ் நகல் **Ex.P**3 ஆகவும்,

**TN70AM9157** வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் **Ex.P**4 ஆகவும்,

மனுதாரரின் ஆதார் கார்டு ஜெராக்ஸ் நகல் **Ex.P**5 ஆகவும், அது அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது.

மனுதாரரின் பேன்கார்டு ஜெராக்ஸ் நகல் **Ex.P6** ஆகவும், அது அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது.

மனுதாரரின் வங்கி பாஸ்புத்தகம் ஜெராக்ஸ் நகல் **Ex.P7** ஆகவும், அது அசலுடன் ஒப்பிட்டு சரிப்பார்க்கப்பட்டது.

மனுதாரரின் மருத்துவமனை பில்கள் ரூ.2,32,702 **Ex.P8** ஆகவும், 2 வது எதிர் மனுதராார் தரப்பு ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டும்.

**குறுக்கு விசாரணை 2 வது எதிர் மனுதாரர் தரப்பில்**

நான் TN24V3181 என்ற வாகனத்தில் பின்புறமாக அமர்ந்து சென்றேன். அந்த வாகனத்தை எனது கணவர் ஓட்டி வந்தார். விபத்து மாலை 6 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் TN24V3181 என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த எனது கணவர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தின் போது ஈடுபட்ட மற்றொரு வாகனமும் யமஹா இருசக்கர வாகனம் என்றால் சரிதான். இரண்டு இருச்சரக்கர வாகனமும் நேருக்கு நேர் மோதிக்கொண்டது என்றால் சரிதான். எனது கணவருக்கு எதிராக பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்வதற்கு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. 1, 2 எதிர்மனுதாரர்கள் வாகனத்ததை இந்த வழக்கில் தவறுதலாக போட்டிருககிறோம் என்றால் சரியல்ல. 1,2 எதிர்மனுதாரர்களின் கவனக்குறைவும் அஜாக்கிரதையும் காரணம் இல்லை என்பதால் அவர்கள் இழப்பீடு கொடுக்க தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் கவணமாக ஓட்டியிருந்தால் விபத்தை தவிர்திருக்காலாம் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வலது காலில் எலும்புமுறிவு ஏற்பட்டது. முதலில் தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைப்பார்த்து பிறகு பெங்களுரில் உள்ள நாராயணா மருத்துவமனையில் காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதற்கு ராடு பொறுத்தப்பட்டுள்ளது. அந்த ராடு இன்னும் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள மா.த.சா.ஆ.8 க்கான தொகை கிடைக்கவேண்டும் என்றால் நான் மருத்துவமனையை விசாரிக்க வேண்டும் என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதாரார் வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் பாலீசி விதிமீறல் உள்ளதால் 2 வது எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுகக கடைமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன். வருமானத்தை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு நிரந்தர ஊனமோ அல்லது செயல் திறன் பாதிப்போ வருமான இழப்போ இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் அதனால் 2 வது

எதிர்மனுதாரார் இழப்பீடு கொடுக்க கடமைப்ட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.